பக்கங்கள்: 08

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2056 புரட்டாதி 31 வெள்ளிக்கிழமை 17.10.2025 கதிர் 341

### இனி இது ரகசியம் அல்ல!

மெல்லவும்முடியாமல்விழுங்கவும் முடியாமல்என்பது போன்றநிலையில் பாவம்தடுமாறுகிறார் கஜேந்திரகுமார். அவரது கொள்கைக் கூட்டணி விடயத்தில்தான்அவருக்குஇந்தப் ☞ 2

# பொருளாதாரச் சீர்திருத்தத்தை இலங்கை தொடரவேண்டும்

## பன்னாட்டு நாணய நிதியம் வலியுறுத்து

இலங்கை பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டு வலுவான வளர்ச்சி நிலையை நோக்கி முன்னேறி வருந்தாலும் அதனைத் தக்கவைத்துக் கொள்வதற்கு பொருளாதார சீர்திருத்த த்தைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்தவேண்டும் என்று பன்னாட்டு நாணய நிதியம் வலியுறுத்தியுள்ளது.

ஆசியா மற்றும் பசிபிக் பிராந்திய பொருளாதார நிலவர அறிக்கையை வெளியிடும் செய்தியாளர் சந்திப்பில், நாணய நிதிய ஆசியா மற்றும் பசிபிக் பிரிவு இயக்குநர் கிருஷ்ணாஸ்ரீநிவாசன்மற்றும்துணைஇயக்குநர்தோமஸ் ஹெல்ப்லிங் ஆகியோர் இலங்கையின் பொருளாதார நிலைமை மற்றும் கொள்கை முன்னுரிமைகள் குறித்து விரிவாக விளக்கமளித்தனர்.

'கடுமையான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்ட பிறகு, இலங்கை தற்போது நாணய நிதியத்தின் ஆதரவு பெற்ற திட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்தி வருகிறது. இதன் பயனாக கடந்த ஆண்டு 5% வளர்ச்சி பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த ஆண்டும் அடுத்த ஆண்டும் சுமார் 4.2% வளர்ச்சி ஏற்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது. நீண்ட காலத்தில் சுமார் ☞ 3

# 3 லட்சம் சாரதிப் பத்திரங்கள் வழங்கப்படாமல் நிலுவையில்


தற்போது 3 இலட்சத்திற்கும் அதிகமான சாரதி அனுமதிப்பத்திரங்கள் வழங்குவதற்காக நிலுவையில் இருப்பதாகவும், அவற்றை எதிர்வரும் 3 மாதங்களுக்குள் அச்சிட்டு வழங்குவதற்கு எதிர்பார்ப்பதாகவும் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவில் அமைச்சின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

அத்துடன், மேம்படுத்தப்பட்ட பாதுகாப்பு அம்சங்களுடன் கூடிய புதிய சாரதி அனுமதிப்பத்திரத்தையும் இந்த ஆண்டு அச்சிட்டு வழங்குவதாகவும் அந்த அதிகாரிகள் மேலும் கருத்து தெரிவித்தனர். சாரதி அனுமதிப்பத்திரங்களை அச்சிடுவதற்குத் தேவையான ஒரு மில்லியன் அட்டைகளைப் பெற்றுக்கொள்வதற்கான அனைத்து ஏற்பாடுகளும் நிறைவடைந்துள்ளதாகவும் அமைச்சின் அதிகாரிகள் குழுவில் அறிவித்தனர்.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு அமைச்சர் பிமல் ரத்நாயக்க தலைமையில் கடந்த 9ஆம் ☞ 2

# குற்றவாளிகளைக் கொண்டாடும் போக்கை இலங்கை முடிவுக்குக் கொண்டுவரவேண்டும்

## மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்து




இலங்கையில்வலிந்துகாணாமலாக் கப்படல்கள் உள்ளடங்கலாக சகல மீறல்கள் பற்றிய உண்மைகள் வெளிப்படுத்தப்படுவதுடன் அதனைத் தெரிந்துகொள்வதற்கான உரிமை அவர்களது உறவினர்களுக்கு உண்டு எனச் சுட்டிக்காட்டியுள்ள மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் இடைக்காலநிறைவேற்றுப்பணிப்பாளர் ஃபெடெரிக்கோ பொரெல்லோ, தண்டனைகளிலிருந்து விடுபடும் போக்கு மற்றும் குற்றவாளிகள் கொண்டாடப்படும் கலாசாரம் என்பன முடிவுக்குக்கொண்டுவரப்படவேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையில் நீண்டகாலமாக நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் முறையற்ற வரிக்கொள்கை மற்றும் கல்வித்துறைக்கான குறைந்தளவு நிதி ஒதுக்கீட்டினால் பாடசாலைகள் முகங்கொடுத்துவரும் நெருக்கடிகள் தொடர்பில் விளக்கியும், அவற்றுக்கான தீர்வுப்பரிந்துரைகளை உள்ளடக்கியும் சர்வதேச மனித உரிமை ☞ 2

# ஐக்கிய மக்கள் சக்தியுடன் பேச மூவர் குழுவை நியமித்த ஐதேக

ஐக்கிய மக்கள் சக்தியுடன் பேச்சு நடத்துவதற்காக மூவரடங்கிய குழுவொன்றை நியமிக்க ஐக்கிய தேசியக் கட்சி நடவடிக்கை எடுத்துள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவன் விஜயவர்தன, பொதுச் செயலாளர் சட்டத்தரணி தலதா அத்துக்கோரல, சட்டத்தரணி ரோலண்ட் பெரேரா ஆகியோரே இந்த மூவரடங்கிய குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

இலங்கையின்ஜனநாயகப்பலகட்சிமுறைமையைப் பாதுகாப்பதற்காக அனைத்து அரசியல் கட்சிகளையும் ஒரே மேடைக்குக் கொண்டு வருவதே ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடு என்பதை மீண்டும் வலியுறுத்துவதாக அக்கட்சி தெரிவித்துள்ளது.

ஐக்கியதேசியகட்சியுடன்அரசியல்மற்றும்கொள்கை ரீதியாக இணைந்து செயற்படுவதற்கு ஐக்கிய மக்கள் சக்தியின் செயற்குழு மற்றும் முகாமைத்துவக் குழு கடந்த வாரம் ஏகமனதாக அனுமதியளித்தது. ☞ 2

# ஊழல் குற்றச்சாட்டில் முன்னாள் அதிகாரி கைது

அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தின் (SEC) முன்னாள் நிர்வாக இயக்குநர் நிலு விஜேதாச, லஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவால் கைது செய்யப்பட்டுள்ளார்.

2019ஆம் ஆண்டு சிறிகொத்தாவில் உள்ள ஐக்கிய தேசியக் கட்சி தலைமையகத்தை புதுப்பிப்பதற்காக, அரச பொறியியல் கூட்டுத்தாபன ஊழியர்களையும் சொத்துக்களையும் தவறாகப் பயன்படுத்தியதன் மூலம் அரசுக்கு ரூ. 1.6 மில்லியனுக்கும் அதிகமான நிதி இழப்பை ஏற்படுத்தினார் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் இந்தக் கைது இடம்பெற்றுள்ளது.

# தொடருந்திலிருந்து இறங்க முற்பட்ட பெண் தவறி வீழ்ந்து பரிதாபச் சாவு

சாவகச்சேரிப் பகுதியில் தொடருந்தில் இருந்து இறங்க முற்பட்ட குடும்பப் பெண் தவறி விழுந்து உயிரிழந்துள்ளார்.

கொழும்பில் இருந்து யாழ் நோக்கி வந்த தொடருந்து சாவகச்சேரி - சங்கத்தானையை அடைந்ததும் மேற்படி பெண் தொடருந்திலிருந்து இருந்து இறங்க முற்பட்டசமயம் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இருப்பினும் அவர் இருந்த பெட்டியின் வாயில் ஊடாக இறங்குவதற்கு இறங்கு தளம் இல்லாத காரணத்தால் வேறு பெட்டி ஊடாகச் சென்று இறங்க முற்பட்ட வேளையில் தொடருந்தும் நகர்ந்ததால் பெண் கீழே விழுந்து படுகாயமடைந்திருந்தார்.

படுகாயமடைந்த பெண்ணை சாவகச் சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக் காக சேர்த்தபோதும் அங்கு அவர் உயிரிழந் தார்.

பல்கலைக்கழகம்ஒன்றில்கற்கும்மகனிடம் சென்றுவிட்டு வீடு திரும்பிய போதே இந்தத் துயரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சாவகச்சேரி கோவிற்குடியிருப்பைச் சேர்ந்த 53 வயதான சுபாசினி என்ற பெண்ணே உயிரிழந்துள்ளார். மேற்படி விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# ஒரே நாளில் அதிகூடிய வருவாய் சுங்கத்துறைக்கு

இலங்கை சுங்கத்துறை ஒக்டோபர் 15 அன்று இதுவரை இல்லாத அளவுக்கு ஒரே நாளில் அதிகபட்சமாக ரூ. 2,470 மில்லியன் வரி வருவாயை வசூலித்துள்ளதாக நேற்று அறிவித்தது.

சுங்கத்துறை இயக்குநர் ஜெனரலின் கூற்றுப்படி, இந்த ஆண்டு இதுவரை சேகரிக்கப்பட்ட மொத்த வருவாய் ரூ. ☞ 2

# ஒக். 28 வரை கொழும்பில் இடர்கால அவசர நிலை

கொழும்புமற்றும்அதைச்சுற்றியுள்ளபகுதிகளில்கனமழைமற்றும் இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்ற முன்னறிவிப்புகளைத் தொடர்ந்து, கொழும்பு மாநகர சபை (ளீனிளீ) அக்டோபர் 16 முதல் 28 வரை அவசரகால பேரிடர் மீட்புப் பணியை அறிவித்துள்ளது.

பாதகமான வானிலையால் பாதிக்கப்பட்ட குடியிருப்பாளர்களுக்கு உதவ அதன் பேரிடர் மேலாண்மை மற்றும் அவசரகால மீட்புப் பிரிவுகள் முழுமையாகத் தயாராக இருப்பதாக ளீனிளீ அறிவித்துள்ளது.

வானிலை ஆய்வுத் துறையின் கூற்றுப்படி, பல பகுதிகளில் கனமழை பெய்யும் என்றும், தற்காலிக வெள்ளம் மற்றும் மின்னல் அபாயம் ஏற்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

குடியிருப்பாளர்கள் விழிப்புடன் இருக்கவும், தேவைப்பட்டால் உதவிக்கு மாநகர சபையைத் தொடர்புகொள்ளவும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.'விசாரணைகளுக்கு: 011-2422222,'அவசரகால ஹாட்லைன்: 011-2686087

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

பரிதாபம். அவர் ஒற்றையாட்சியையும் 'ஏக்கிய ராஜ்ஜி'யவையும் எதிர்த்துக் கொண்டிருக்க, அவரது கொள்கைக் கூட்டாளிகளான ஜனநாயகத்தமிழ்த்தேசியக்கூட்டணியினரோ ஒற்றையாட்சியின் கீழான அரசமைப்பின் 13ஆவது திருத்தம் தந்த மாகாண சபையை கட்டாயம் நடைமுறைப்படுத்தவேண்டும், அதனைப் பலப்படுத்த வேண்டும் என்று தலைகீழாக நிற்கிறார்கள். ஒன்றுக்கொன்று முரணான கொள்கைகளைக் கொண்ட இந்த இருதரப்பும் எப்படிக் கொள்கைக் கூட்டணியில் இருக்கிறார்கள் என்று கஜேந்திரகுமாரைப் பார்த்துக் கேட்டால், ஒன்றில் ஒற்றையாட்சிக் கொள்கையை ஏற்றுக்கொண்டு கொள்கைக் கூட்டணியில் இருக்கின்றேன் என்று சொல்லவேண்டும் அல்லது ஒற்றையாட்சியை ஏற்காததால் கொள்கைக் கூட்டணியில் இருந்து வெளியேறிவிட்டேன் என்று அறிவிக்கவேண்டும். இது இரண்டும் இல்லாமல், நான் கொள்கையோடுதான் இருக்கின்றேன், அவர்களை அவர்கள் கொள்கையைக்கடைப்பிடிக்கவில்லைஎன்றால் கூட்டணியிலிருந்துஅவர்களாகவேவெளியேறினார்கள் என்றுதான் கருதவேண்டியிருக்கிறது என்று கூறி தலையைச் சுற்றி மூக்கைத் தொடப் பார்க்கிறார்.

தமிழ் அரசுக் கட்சியின் செயலாளர் சுமந்திரனைத்தவிர வேறுயாருக்குஎதிராகவும் அவரால் நேரடியாக முகத்துக்கு நேராக எடுத்தெறிந்து பேச முடியவில்லைப் போலும். தனது கொள்கைக் கூட்டாளிகள் எல்லோரும் முன்னாள் இயக்கக்காரர்கள் என்பதால் அவர்களின் கூட்டணியிலிருந்து வெளியேறிவிட்டேன் என்று வெளிப்படையாக அறிவிக்க அஞ்சுகிறாரோ தெரியவில்லை.

தங்களுடைய கொள்கைக்கூட்டணி குறித்து கஜேந்திரகுமார் நேற்று யாழ்ப்பாணத்தில் நீட்டி முழங்கியவற்றை நீங்கள் வாசித்தால் நான் ஏன் அவர் பற்றி நீட்டி முழங்குகின்றேன் என்பதைப் புரிந்துகொள்ள முடியும். அவர் தெரிவித்தவை வருமாறு:

புதன்கிழமை கூட்டத்தை நடத்தியது தமிழ்க் கட்சிகள் அல்ல. ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியே நடத்தியது. (அதாவது கஜேந்திரகுமாரின் கொள்கைக் கூட்டாளிகள் மட்டும்தான் கூட்டத்தை நடத்தினார்கள்) ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் பங்காளிகள் கூடி மாகாண சபைத் தேர்தலை வைக்கவேண்டும் என்பது தொடர்பிலும், அதனை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பது தொடர்பிலும் கதைத்துள்ளனர். நாங்கள் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தில் மிகத் தெளிவாக ஒற்றையாட்சி முறைமைக்குள் தமிழ் அரசியல் நடத்த அறவே இடமில்லை என்பதனை எழுத்து மூலமாக தெளிவாக வலியுத்தியுள்ளோம். அது மட்டுமன்றி, 13 ஆம் திருத்தம் இறுதித் தீர்வும் அல்ல, 'ஏக்கிய ராஜ்ஜிய' யோசனை நிராகரிக்கப்படவேண்டும் என்பதையும் வலியுறுத்தியுள்ளோம். இரண்டும் ஒப்பந்தத்தில் தெளிவாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கு இணங்கித்தான் அந்த ஒப்பந்தத்தில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் பங்காளிக் கட்சிகள் அனைத்தும் ஒப்பமிட்டனர.

அதற்குப் பிறகு உள்ளூராட்சி சபைகளில், எங்களோடு இணைந்து, நாங்கள் விட்டுக் கொடுப்புகளைச்செய்து அவர்களுக்குப் பதவிகளைப் பெற்றுக்கொடுத்தோம். எம்மோடு ஒப்பந்தம் செய்திருக்காது விட்டால் அவர்களால் எந்தவொரு சபையிலும் பதவிகளை எடுத்திருக்க முடியாது. தவிசாளர் பதவிகளையும் பெற்றிருக்கமுடியாது, அப்படிப் பதவிகளை பெறஎமதுஉதவிகளைப்பெற்றுவிட்டு,நன்மைகளைப் பெற்றுவிட்டு இப்போது செய்த ஒப்பந்தங்களை மீறுகின்ற வகையில் அவர்கள் செயற்படுகிறார்கள்.

இந்த நேரத்தில் 13ஆம் திருத்தம் சம்பந்தமாக அவர்கள் கூட்டங்களை வைப்பதை அவர்கள் தாங்களாக ஒப்பந்தத்தில் இருந்து விலகும் செயலாகத்தான் நாங்கள் பார்க்கின்றோம். ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் தலைவர்களுடன் ஒரு மாதத்துக்கு முன்பதாக - நான் வெளி நாடுகளுக்குப் பயணிப்பதற்கு முன்னர்-அதாவது, 13ஆம் திருத்தம் தொடர்பில் அவர்கள் திருகோணமலையில் நடத்திய சந்திப்புக்கு முன்பே இந்த விடயத்தைத் தெளிவாக எடுத்துக் கூறியிருந்தேன்.

13ஆம் திருத்த விடயத்தில் எங்களுடைய செயற்பாடுகளை நாம்தான் முன்னெடுக்க வேண்டும். இல்லாவிட்டால் அதையும் இல்லாது செய்யும் ஆளும்தரப்பாகவே இது இருக்கின்றது. ஆகவே கொள்கை ஒப்பந்தத்தை மீறுகின்ற நோக்கத்தோடு நாம் இதனைச் செய்யவில்லை என ஜனநாயகத் தமிழ் தேசியக் கூட்டணியினர் எமக்குத் தெரிவித்தனர். அப்போது நான் சொன்னேன். ஆளும்தரப்பில் அரசுத் தலைவர், பிரதமர், அயலுறவுத்துறை அமைச்சர் என முக்கியமான தரப்புகள் தெளிவாக புதிய அரசமைப்புக் குறித்த உத்தியோகபூர்வ வாக்குறுதிகளை வழங்கி இருக்கின்ற இடத்தில், புதிய அரசமைப்பு 'ஏக்கிய ராஜ்ஜிய' என்ற ஒற்றையாட்சியை அடிப்படையாகக் கொண்டிருக்கின்ற நிலையில் நாங்கள் இவ்வாறு செயற்பட முடியாது என்றேன்.

இந்த 13 தொடர்பான கூட்டங்களை நடத்துவதன் சூத்திரதாரி சுரேஷ் பிரேமச்சந்திரனே. அண்மையில் நான் சுவிர்ஸலாந்து சென்றிருந்தபோது சுரேஸ் பிரேமச்சந்திரனும் அங்கு வந்திருந்தார். அங்கு நடந்த ஒரு கூட்டத்தில் புதிய அரசமைப்பைக் கொண்டு வரப்போவதாக ஆளும்தரப்பால் தெளிவாக வாக்குறுதி கொடுக்கப்பட்டது. அரசிடம் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மைக்கு மேலதிகமாக இருக்கும்போது ஒருதலைப்பட்சமாக எல்லாவற்றையும் நடைமுறைப்படுத்தக்கூடிய சூழலே இருக்கின்றது.

இந்தப் பின்னணியில், 13ஆம் திருத்தத்தைப் பற்றித் தொடர்ந்தும் கதைத்துக் கொண்டிருப்பது என்பது அந்த 'ஏக்கிய ராஜ்ஜிய' அரசமைப்பை எதிர்க்கவேண்டிய பொதுமக்களைத் திசை திருப்பி ஏக்கிய இராச்சிய அரசமைப்பைத் தமிழ் மக்களுடைய அனுமதியோடு ஆதரவோடு நிறைவேற்றுவதற்குத் துணை போகின்ற ஒரு செயல் என்றே நாம் பார்க்கின்றோம். ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்கு நாங்கள் வலியுறுத்துவது தயவுசெய்து எமது மக்களுக்கு மோசமான செயலைச் செய்யாதீர்கள் என்பதைத்தான்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் சுமந்திரன் தான் உருவாக்கிய 'ஏக்கிய இராஜ்ஜிய' வரைவை தமது கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களை வைத்துக்கொண்டு அவர்களுக்குத் தனித்து அழுத்தங்களைக் கொடுத்து எதிர்க்காமல் இருப்பதற்குரிய வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கும் சூழலில், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியாவது அதை எதிர்த்துச் செயற்படவேண்டும். அதை விடுத்து சுமந்திரன் போன்ற தரப்புகளுக்கு துணை போகின்ற வகையில் 'ஏக்கிய இராஜ்ஜிய' வரைவை நிறைவேற்றுவதற்குத் துணையாகச் செயற்படக்கூடாது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியுடனோ - தமிழ்த் தேசியப் பேரவையுடனோ ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி பயணிக்க விருப்பமில்லாவிடின் பகிரங்கமாக வெளியேற முடியும். நாம் தவறாக நினைக்கப் போவதில்லை. கொள்கையில் நாம் உறுதியாக உள்ளோம். இதற்குப் பிறகும் 13 பற்றி மக்கள் மத்தியில் கொண்டு போய் கருத்தை விதைக்கின்றது என்பது முழுக்க முழுக்க சுமந்திரன் உருவாக்கிய அரசியல் வரைவைக் கொண்டு ஒற்றையாட்சிக்குள் தமிழ் மக்களை முடக்குகின்ற நிகழ்ச்சி நிரலுக்குத் துணை போகின்ற - உண்மையாக ஒத்துழைக்கின்ற - செயலே.

38 வருடங்களாக நடைமுறையில் இல்லாத அரசமைப்பு விவகாரத்தை நடைமுறைப்படுத்தக் கேட்கின்றோம் என்று சொன்னால் எந்தளவு தூரத்துக்கு அது பயனற்றது என்பது அந்தக் கோரிக்கையிலே வெளிவருகின்றது. இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை தமிழ் மக்கள் நிராகரிக்கவில்லை. இந்திய-இலங்கை ஒப்பந்தத்தில் இருக்கக்கூடிய அம்சத்தை தீர்வாக நடைமுறைப்படுத்துவதாக இருந்தால் ஒற்றையாட்சியைத் தாண்டிய ஒரு சமஷ்டி ஆட்சியூடாக மட்டும்தான் நடைமுறைப்படுத்த முடியும். இந்தியா தொடர்ந்தும் 13ஆம் திருத்தத்தை பற்றி கதைப்பது என்பது அர்த்தமற்ற கருத்தாகத்தான் நாங்கள் கருதுகின்றோம் - என்றார்.

ஆக மொத்தத்தில் அவரது கொள்கைக் கூட்டாளிகள் அவரது கொள்கையோடு ஒத்துப்போகவில்லை என்பது தெளிவாகத் தெரிந்தாலும், கொள்கைக்கூட்டணியில் இருந்து அவர் ஒருபோதும் வெளியேறமாட்டார். அப்படி வெளியேறிவிட்டேன் என்று அறிவிப்பதற்கு அவர் யாருக்குப் பயப்படுகிறார் என்பதுதான் தெரியவில்லை. பொறுத்திருந்து பார்ப்போம்!.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## குற்றவாளிகளைக்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைப்புக்களில் ஒன்றான மனித உரிமைகள் கண்காணிப்பகத்தினால் தயாரிக்கப்பட்டுள்ள 'வரிச்சலுகைகளும் பாடசாலைகள் முகங்கொடுக்கும் நெருக்கடிகளும்' எனும் தலைப்பிலான ஆய்வறிக்கையின் வெளியீட்டு நிகழ்வு புதன்கிழமை கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

அந்நிகழ்வில் தொடக்கவுரை ஆற்றிய ஃபெடெரிக்கோ பொரெல்லோ, உலகளாவிய ரீதியில் மனித உரிமைகள் மற்றும் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதையும், அவற்றை மேம்படுத்துவதையும் இலக்காகக்கொண்டு மனித உரிமைகள் கண்காணிப்பகம் பணியாற்றிவருவதாகச் சுட்டிக்காட்டினார்.

அதேபோன்று அண்மையில் முடிவுக்கு வந்த ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பான பொறுப்புக்கூறல் செயற்திட்டத்தை மேலும் இரண்டு வருடங்களுக்குக் காலநீடிப்புசெய்யும் வகையில் புதிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டமையையும், அதற்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம் வாக்கெடுப்பைக் கோராமையையும் வரவேற்பதாக அவர் தெரிவித்தார்.

அதேவேளை இலங்கையில் கடந்தகால மீறல்களால் பாதிக்கப்பட்ட தரப்பினரைச் சந்தித்ததாகக் குறிப்பிட்ட ஃபெடெரிக்கோ பொரெல்லோ, வலிந்துகாணாமலாக்கப்படல்கள் உள்ளடங்கலாக மீறல்கள் பற்றிய உண்மைகள் வெளிப்படுத்தப்படுவதுடன் அதனைத் தெரிந்துகொள்வதற்கான உரிமை அவர்களது உறவினர்களுக்கு உண்டு எனவும், தற்போதுவரை தொடரும் தண்டனைகளிலிருந்து விடுபடும் போக்கு மற்றும் குற்றவாளிகள் கொண்டாடப்படும் கலாசாரம் என்பன முடிவுக்குக் கொண்டுவரப்படவேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

அதுமாத்திரமன்றி உலகளாவிய ரீதியில் உக்ரேன் மீது ரஷ்யாவும், பலஸ்தீனத்தின் மீது இஸ்ரேலும் கட்டவிழ்த்துவிட்டுள்ள மீறல்கள் குறித்தும், ஆப்கானிஸ்தான் மற்றும் மியன்மார் உள்ளிட்ட நாடுகளின் நிலைவரம் குறித்தும் நினைவுகூர்ந்த அவர், மீறல்கள் மற்றும் ஒடுக்குமுறைகள் மூலம் உலகநாடுகள் தமத அதிகாரத்தைத் தொடர்ந்து நிலைநிறுத்திக்கொள்ளும் போக்கினை அவதானிக்கமுடிவதாகவும், அமெரிக்கா அதற்கு ஆதரவாக செயற்படுவதாகவும் குறிப்பிட்டார்.

மேலும் இந்தப் போக்கு 'புதிய ஒழுங்காக' மாறியிருப்பினும், அதனை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமுடியாது எனத் தெரிவித்த பொரெல்லோ, 'இலங்கையில் 2022 ஆம் ஆண்டு தோற்றம் பெற்ற பொருளாதார நெருக்கடியை அடுத்து உருவான அரகலய போராட்டத்தின் ஊடாக மேற்குறிப்பிட்டவாறான போக்குகளைத் தம்மால் ஏற்கமுடியாது என மக்கள் தெளிவாக வெளிப்படுத்தினர். இலங்கையில் மாத்திரமன்றி பங்களாதேஷ், நேபாளம், மடகஸ்கார் போன்ற பல நாடுகளில் இவ்வாறான போராட்டங்கள் எழுச்சியடைந்ததைப் பார்த்தோம். எனவே இவ்வாறான கட்டமைப்பை நேர்த்தியான புதியதொரு கட்டமைப்பின் ஊடாகப் பதிலீடு செய்வதற்கான வாய்ப்பு இலங்கைக்கு உண்டு' என்றார்.

## ஐக்கிய மக்கள்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கு முன்னர் இரு சந்தர்ப்பங்களில் கூடிய ஐக்கிய மக்கள் சக்தியின் முகாமைத்துவக் குழுட்டத்திலும் இந்த யோசனைக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

அதற்கமைய குறித்த யோசனைக்கு செயற்குழுவிலும் அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்காக கடந்த 9ஆம் திகதி ஐக்கிய மக்கள் சக்தியின் செயற்குழு கொழும்பில் கூடியது. எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் ஏனைய சகல உறுப்பினர்களது பங்கேற்புடன் இடம்பெற்ற இந்த கூட்டத்தில் ஐ.தே.க.வுடன் இணைந்து செயற்படுவதற்கு ஏகமனதாக அனுமதி வழங்கப்பட்டது.

அத்தோடு இதற்கான ஒருங்கிணைப்பு செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்கான பொறுப்புக்கள் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்களான எஸ்.எம்.மரிக்கார், முஜிபுர் ரஹ்மான் மற்றும் கபீர் ஹசீம் ஆகியோரிடம் வழங்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் உத்தேச மாகாணசபைத் தேர்தலில் இரு கட்சிகளும் இணைந்து போட்டியிடுவதற்கான பேச்சுவார்த்தைகள் மற்றும் அடுத்த கட்ட நடவடிக்கைகளை வரும் நாட்களில் ஆரம்பிப்பதற்கும் இதன் போது தீர்மானிக்கப்பட்டது.

இந்நிலையில் ஐக்கிய மக்கள் சக்தியால் எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கு தாமும் இணங்குவதாக ஐக்கிய தேசிய கட்சி நேற்றுமுன்தினம் விசேட அறிக்கையொன்றின் மூலம் தெரிவித்திருந்தது.

இலங்கையின் ஜனநாயகப் பல கட்சி முறைமையைப் பாதுகாப்பதற்காக அனைத்து அரசியல் கட்சிகளையும் ஒரே மேடைக்குக் கொண்டு வருவதே ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடாகும். இந்த இலக்கை அடைவதற்காக ஐக்கிய மக்கள் சக்திக்கும் தமக்குமிடையிலான தூரத்தைக் குறைத்து, ஒற்றுமையுடன் செயற்பட உறுதிபூண்டுள்ளதாக ஐக்கிய தேசிய கட்சி குறித்த அறிக்கையில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஒரே நாளில்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

1,867 பில்லியன் ஆகும், இது துறையை அதன் வருடாந்திர இலக்கான ரூ. 2,115 பில்லியனைத் தாண்டும் பாதையில் கொண்டு செல்கிறது.

வாகன இறக்குமதி வரிகள் முக்கிய வருமான ஆதாரமாக இருந்ததாகவும், அது சுங்க வருவாயில் கணிசமாகப் பங்களித்துள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை, இலங்கையின் உள்நாட்டு வருவாய் துறை செப்டம்பர் மாத இறுதிக்குள் அதன் எதிர்பார்க்கப்பட்ட வரி வருவாயில் 102%, அதாவது இலக்குக்கு மேலான வருவாயை வசூலித்ததாக நாடாளுமன்றக் குழுவிடம் அதிகாரிகள் தெரிவித்தனர்.

செப்டம்பர் 30 நிலவரப்படி உண்மையான வருவாய் ரூ. 1.64 டிரில்லியனை எட்டியுள்ளது, எதிர்பார்க்கப்பட்ட ரூ. 1.61 டிரில்லியனுடன் ஒப்பிடும்போது. இந்த எண்ணிக்கை முழு ஆண்டு இலக்கான ரூ. 2.19 டிரில்லியனில் 75% ஆகும்.

சட்டமன்ற உறுப்பினர் விஜேசிறி பஸ்நாயக்க தலைமையில் சமீபத்தில் (08) நடைபெற்ற குழுக் கூட்டத்தின் போது இந்தத் தரவுகள் வழங்கப்பட்டன.

குழு உறுப்பினர்கள் வருவாய் செயல்திறன், தற்போதைய டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் வரி நிர்வாகத்தில் உள்ள சவால்களை மதிப்பாய்வு செய்தனர், அதே நேரத்தில் துறையின் செயல்பாடுகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட சீர்திருத்த முன்மொழிவுகளையும் கோரினர்.

உள்நாட்டு இறைவரி வருவாய் பணிப்பாளர் நாயகம் பெர்னாண்டோ மற்றும் பிற மூத்த அதிகாரிகள் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

## 3 லட்சம்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திகதி பாராளுமன்றத்தில் கூடியபோதே இது தொடர்பான கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

இங்கு கருத்துத் தெரிவித்த குழுவின் தலைவர், நிலுவையில் உள்ள சாரதி அனுமதிப்பத்திரங்களை விரைவாக வழங்குவதற்காக அவற்றை அச்சிடத் தேவையான அச்சு இயந்திரத்தை ஒவ்வொரு மாகாணத்திலும் நிறுவுமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

வாகன இலக்கத் தகடுகளை வழங்குவது குறித்தும் குழுவின் தலைவர் அதிகாரிகளிடம் இதன்போது வினவினார். அதற்கமைய, அதற்கான வழங்குநரைத் தேர்ந்தெடுக்கும் செயன்முறை தற்போது நடைபெற்று வருவதாகவும், அமைச்சரவையின் அனுமதியை அடுத்து அச்செயன்முறையை நிறைவுசெய்து இலக்கத் தகடுகளை வழங்கும் செயன்முறையை ஆரம்பிக்க முடியும் என அதிகாரிகள் குழுவில் தெரிவித்தனர்.

அத்துடன், தற்போது நடைமுறையில் உள்ள பயணிகள் போக்குவரத்து தொடர்பான ஒருங்கிணைந்த கால அட்டவணை குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

ஒருங்கிணைந்த கால அட்டவணையை செயற்படுத்துவது ஒரு கொள்கையாக இருப்பதால், அதிலுள்ள குறைபாடுகளைக் கண்டறிந்து, பயணிகளுக்கு மிகவும் வினைத்திறனான சேவையை வழங்குவதற்காக எதிர்காலத்தில் மேலும் பல பகுதிகளுக்கு இதனை அறிமுகப்படுத்தத் தயாராக இருப்பதாகக் குழுவின் தலைவர் தெரிவித்தார்.

இங்கு கருத்துத் தெரிவித்த குழுவின் தலைவர், புகையிரதத் தண்டவாளங்களில் யானைகளுக்கு ஏற்படும் விபத்துக்களைக் குறைப்பதற்கான ஒரு முன்னோடித் திட்டம் குறித்தும் தகவல்களை முன்வைத்தார். அதற்கமைய, 2.8 மில்லியன் ரூபாய் செலவில்

தொடர்ச்சி 6ம் பக்கம்....

காலைக்கதிர் Kalaikkathir

## 3 லட்சம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மட்டக்களப்புப் பாதையில் பயணிக்கும் புகையிரதங்களுக்கு தொலைநோக்குத் தொழில்நுட்பத்துடன் கூடிய கமெராக்களைப் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் தெரிவித்தார். இதன் மூலம் காட்டு யானைகள் புகையிரதத்தில் மோதும் சம்பவங்களைக்குறைப்பதற்கானவாய்ப்புகள் கண்காணிக்கப்படும் என்றும் குழுவின் தலைவர் மேலும் கருத்துத் தெரிவித்தார்.

அத்துடன்,பாராளுமன்றஉறுப்பினர்களின் பகுதிகளில் உள்ள பிரச்சினைகள் மற்றும் அவற்றுக்குத் தேவையான தீர்வுகள் குறித்தும் குழுவில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

## பொருளாதாரச்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

3% நிலையான வளர்ச்சி விகிதம் என்ற இலக்கு நோக்கி நாடு நகர்கிறது' என்று தோமஸ் ஹெல்ப்லிங் தெரிவித்தார்.

'இந்த முன்னேற்றம் நிலைக்க, திட்டம் இடையறாது நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். நிதி ஒழுங்கு, அரசுடமை நிறுவனங்களின் திறன் மேம்பாடு மற்றும் ஆட்சிக் கட்டமைப்பின் வலிமை ஆகியவை சீர்திருத்தத்தில் இன்றியமையாதவை. இதுவே பொருளாதார நம்பகத்தன்மையை நிலைநிறுத்தும் முக்கிய தளம்.' என்று அவர் மேலும் தெரிவித்தார்.

'சில ஆண்டுகளுக்கு முன் இலங்கை கடுமையான நெருக்கடியில் இருந்தது. ஆனால் இன்று மிகப் பெரிய மாற்றம் ஏற்பட்டுள்ளது. இலங்கை அரசு கடினமான சீர்திருத்தப்பாதையைத் தேர்ந்தெடுத்துள்ளது, அதைத் தொடர்ந்து சென்றால் மேலும் பல நன்மைகள் கிடைக்கும்' என்று கிருஷ்ணா ஸ்ரீநிவாசன் தெரிவித்தார்.

'நுண் பொருளாதாரக் கொள்கைகளிலும் ஆட்சித் திறனிலும் வலிமையான நிறுவன கட்டமைப்பைஉருவாக்குவதுஅவசியம்.அரசுத் துறை முதலீட்டு மேலாண்மை மற்றும் நிதி ஒழுங்கமைப்பு ஆகியவை இதற்கான முக்கிய கூறுகள்' என அவர் மேலும் தெரிவித்தார்.

'மின்சார விலை நிர்ணயம், செலவுக் கட்டுப்பாடு மற்றும் அரசுடமை நிறுவன சீர்திருத்தங்கள் ஆகியவை தற்போதைய திட்டத்தின் கட்டமைப்புச் சீர்திருத்தக் குறிக்கோள்களில் அடங்கும். இவை அனைத்தும் நிதி ஒழுங்கையும் நீடித்த வளர்ச்சியையும் உறுதிப்படுத்தும்,' என்று ஹெல்ப்லிங் வலியுறுத்தினார்.

வானிலை மாற்றம் மற்றும் சர்வதேச எரிசக்தி விலைகள் போன்ற காரணிகளின் அடிப்படையில் விலை மாற்றங்கள் தீர்மானிக்கப்படும்எனவும்அவர் குறிப்பிட்டார்.

செய்தியாளர் சந்திப்பின் இறுதியில், இரு அதிகாரிகளும், 'இலங்கை அரசு சீர்திருத்தப் பாதையில் தொடர வேண்டும்; இதுவே நீண்டகால வளர்ச்சி, நிதி நிலைத்தன்மை மற்றும் பொருளாதார சக்திவாய்மை ஆகியவற்றை உறுதி செய்யும் ஒரே வழி' என்று வலியுறுத்தினர்.

காலைக்கதிர்
ஆசிரியர்பீட
தொடர்புகளுக்கு
076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com






காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சா’ாமை
ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## கைது மட்டுமல்ல நீதியும் விரைவாக வரவேண்டும்

இலங்கையின் நீதித்துறை வரலாற்றில் மிகக் கடுமையான அவமானங்களுள்ஒன்று, நீதிமன்றம்எனும்புனிததளத்துக்குள்ளேயே நடந்த கொலை. சட்டம் வழங்கும் நீதி தேடும் இடமே கொலைக்களமாக மாறிய அந்த நிகழ்வு, இலங்கை முழுவதும் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியது. அந்த கொலைக்காக நாடு தழுவிய தேடுதல் பணிகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில், முக்கிய சந்தேகநபர்களில் ஒருவரான இஷாரா செவ்வந்தி உள்ளிட்ட 6 பேர் நேபாளத்தில் கைது செய்யப்பட்டு இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளனர். இது காவல் துறைக்கும் சர்வதேச ஒத்துழைப்பிற்கும் ஒரு முக்கிய வெற்றியாகும். ஆனால் இந்தச் சம்பவம் வெறும் குற்றவியல் விசாரணை அல்ல – சட்டத்தின் மரியாதையையும் நீதித்துறையின் ஆதீக்கத்தையும் கேள்விக்குட்படுத்திய ஒரு மிக மோசமான சம்பவம் என்பதால் அதன் மீது தீவிரமான நடவடிக்கைகள் அவசியம்.

### பேரவமானம்

நீதிமன்றம் என்பது சட்டத்தின் சின்னம், நீதியின் அரண்மனை. அந்த இடத்துக்குள் ஒரு ஆயுதத்துடன் சென்று ஒருவர் உயிரிழக்கச் செய்வது, நாட்டின் சட்ட அமைப்பை முற்றாக கேள்விக்குறியாக்குகிறது. இது ஒரு தனி குற்றச்செயல் மட்டுமல்ல; சட்டத்தின் மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கையைத் தகர்க்கும் ஒரு தாக்குதலாகும். ’நீதி வழங்கும் இடத்தில் கூட பாதுகாப்பில்லை’ என்ற உணர்வு மக்களிடையே பரவுவது, ஜனநாயகத்தின் அடித்தளத்தையே ஆபத்துக்குள்ளாக்கும்.

### ஒத்துழைப்பின் பலன்

நேபாளத்தில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களை இலங்கைக்கு மீண்டும்கொண்டுவருவது, காவல்துறையின்தொடர்ந்துமேற்கொண்ட முயற்சியின் பலன். இதன் மூலம் சர்வதேச குற்றவியல் ஒத்துழைப்பின் முக்கியத்துவம் வெளிப்படுகிறது. பிராந்திய நாடுகள் இணைந்து செயல்பட்டாலே இத்தகைய குற்றவியல் வலையமைப்புகளை முறியடிக்க முடியும் என்பதற்கும் இது ஒரு உதாரணம். ஆனால், கைது செய்து கொண்டு வருவது முதல் படி மட்டுமே; நீதி நிறைவேறுவது தான் உண்மையான வெற்றி.

இலங்கையில் அண்மைக் காலங்களில் ’திட்டமிட்ட குற்றங்கள்’ எனப்படும் ஒழுங்குபடுத்தப்பட்ட குற்றவியல் வலையமைப்புகள் பெருகி வருகின்றன. போதைப்பொருள் வியாபாரம், கொலை ஒப்பந்தங்கள், அடிமைத்தனம், சட்டவிரோத நிதி சுழற்சி – இவை எல்லாம் ஒரே வேரிலிருந்து முளைக்கின்றன. இந்த வேரை அறுப்பதற்கு தற்காலிக நடவடிக்கைகள் போதாது; சட்ட அமைப்பின் முழு வலிமையும் வெளிப்படையாக பயன்படுத்தப்பட வேண்டும். ஒவ்வொரு குற்றத்திற்கும் நிச்சயமான தண்டனை கிடைக்கும் என்ற நம்பிக்கையை உருவாக்கினால் மட்டுமே சமூக ஒழுங்கு நிலைநாட்ட முடியும்.

### சட்டமும் நீதியும்

இந்தச் சம்பவம், சட்ட அமுலாக்க அமைப்புகள் மற்றும் நீதிமன்ற பாதுகாப்பு முறைகள் எவ்வளவு பலவீனமாகிவிட்டன என்பதை நினைவூட்டுகிறது. நீதிமன்றம் உள்ளிட்ட அனைத்து சட்டத் தளங்களிலும் பாதுகாப்பு நடைமுறைகள் முழுமையாக மறுஆய்வு செய்யப்பட வேண்டும். ஆயுதங்கள், ஆபத்தான பொருட்கள், அல்லது சந்தேக நபர்கள் நெருக்கடி நிலைக்கு வராமல் தடுக்க கடுமையான கட்டுப்பாடுகள் அவசியம்.

அதேவேளை, குற்றச்செயல்களில் ஈடுபடும் குழுக்களுக்குத் துணைபுரியும் அரசியல் அல்லது அதிகார வலிமைகள் முற்றிலும் ஒழிக்கப்பட வேண்டும். குற்றவாளி யார் என்றால் முக்கியமல்ல, அவர் எந்தத் துறையினைச் சேர்ந்தவர் என்பதுதான் முக்கியம் என்ற மனப்பான்மையை ஒழிக்காவிட்டால், நீதி பாழாகும்.

இலங்கை, ஜனநாயகத்தின் அடிப்படை தூண்களில் ஒன்றான ’நீதியை’ தக்கவைத்துக் கொள்ள வேண்டுமெனில், இத்தகைய சம்பவங்கள் மீண்டும் நடைபெறாது என்பதற்கான உறுதியான நடவடிக்கைகள் தேவை. குற்றவாளிகளைப் பிடிப்பது மட்டுமல்ல, அவர்களுக்கு தகுந்த தண்டனை வழங்கப்படுவதும் உறுதியாக இருக்கவேண்டும். அதே நேரம் காலம் தாழ்த்தாது அது விரைவுபடுத்தப்படவும் வேண்டும்.

சட்டம் வலிமையாகவும், நீதிமன்றம் மரியாதைக்குரிய இடமாகவும் திகழ்வதே ஒரு நாகரிக சமூகத்தின் அடையாளம். அந்த மரியாதையை மீட்டுக் கொள்ள வேண்டிய நேரம் இது. நேபாளத்தில் கைது செய்யப்பட்ட குற்றவாளிகள் மீது நீதிமுறைப்படி கடுமையான தண்டனைகள் வழங்கப்படுவது, இலங்கையின் சட்ட அமைப்பின் மீது மக்களின் நம்பிக்கையை மீண்டும் கட்டி எழுப்பும்.

நீதிமன்றம்–அது ஒரு கட்டம் அல்ல; அது மக்களின் நம்பிக்கையின் சின்னம். அந்த நம்பிக்கையை மீட்டெடுப்பதே அரசின் கடமையும் சமூகத்தின் பொறுப்பும் ஆகும். ’நீதியின் மீது நம்பிக்கை மீண்டும் உயிர் பெறட்டும்’ –அதுவே இந்தச் சம்பவம் நமக்குக் கற்பிக்கும் மிகப்பெரிய பாடமாகும்.

## இஷாரா செவ்வந்தி எப்படித் தப்பினார்?



கணேமுல்ல சஞ்சீவவின் கொலையைத் தொடர்ந்து, தப்பிச் சென்ற விதம் குறித்து நேபாளத்தில் கைது செய்யப்பட்டு இலங்கைக்கு அழைத்து வரப்பட்ட இஷாரா செவ்வந்தி, பல தகவல்களை வெளிப்படுத்தியுள்ளார் என்று செய்திகள் வெளிவருகின்றன.

கொலைச் சம்பவத்திற்குப் பிறகு, இரண்டு மாதங்களுக்கும் மேலாக மத்துகம மற்றும் தங்காலை பகுதிகளில் தலைமறைவாக இருந்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளியான கணேமுல்ல சஞ்சீவவின் கொலை வழக்கின் பிரதான சந்தேகநபரான இஷாரா செவ்வந்தி, நேபாளத்தில் இலங்கை பொலிஸ் குழுவினர், அந்நாட்டு பொலிஸாருடன் இணைந்து நடத்திய சிறப்பு நடவடிக்கையின்போது சமீபத்தில் கைது செய்யப்பட்டார்.

அதன்படி, உதவி பொலிஸ் அத்தியட்சகர் ரொஹான் ஒலுகல உள்ளிட்ட நான்கு அதிகாரிகள் அடங்கிய குழுவினர், சந்தேக நபர்களை ஸ்ரீலங்கன் விமானம் மூலம் இலங்கைக்கு அழைத்து வந்தனர்.

புதன்கிழமை மாலை 6.52 மணியளவில் சந்தேகநபர்களுடன் விமானம் நாட்டை வந்தடைந்தது.

இவ்வாறு அழைத்துவரப்பட்ட குற்றவாளிகள் பலத்த பாதுகாப்புடன் பல்வேறு பொலிஸ் குழுக்களிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இதன்படி, இஷாரா செவ்வந்தி, டுப்ளிகேட் இஷாரா எனப்படும் தக்ஷி, ஜே.கே. பாய் மற்றும் ஜப்னா சுரேஷ் ஆகியோர் கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

கம்பஹா பபா, களனி வலய குற்றத் தடுப்புப் பிரிவிடமும், நுகேகொடை பபி, மேல் மாகாண தெற்கு குற்றத் தடுப்புப் பிரிவிடமும் ஒப்படைக்கப்பட்டனர்.

இந்த நடவடிக்கை தொடர்பான பல முக்கிய தகவல்கள் ‘அத தெரண‘வுக்கு கிடைத்துள்ளன.

உதவி பொலிஸ் அத்தியட்சகர் ரொஹான் ஒலுகல மற்றும் கிஹான் சில்வா என்ற பொலிஸ் அதிகாரி ஆகியோர் கடந்த ஒக்டோபர் 10 அன்று இந்த நடவடிக்கைக்காக நேபாளம் சென்றுள்ளனர்.

அங்கு, நேபாள துணைத் தூதுவர் சமீரா முனசிங்க மற்றும் அவரது கணவர் ஆகியோர் தேவையான அனைத்து வசதிகளையும் வழங்கி, அந்நாட்டு பொலிஸாரையும் தொடர்புபடுத்தி உதவியதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனைத் தொடர்ந்து செயற்பட்ட இலங்கை விசாரணை அதிகாரிகள், மற்றொரு தரப்பின் மூலம் ஜே.கே. பாயை கைது செய்துள்ளனர்.

அவரிடம் இஷாரா குறித்து ரொஹான் ஒலுகல வினவியபோது, தனக்கு எதுவும் தெரியாது என்று அவர் கூறியுள்ளார்.

எனினும், அவரிடமிருந்து இஷாராவின் தொலைபேசி இலக்கத்தை பொலிஸார் பெற்றுள்ளனர்.

அதன்படி மேற்கொள்ளப்பட்ட தேடுதலில், இஷாரா தங்கியிருந்த இடம் கண்டறியப்பட்டு, ஒலுகல மற்றும் மற்றுமொரு பொலிஸ் அதிகாரி, அவர் வசித்த வீட்டிலிருந்து ஐந்து வீடுகள் தள்ளி தங்கியிருந்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

நேபாள பொலிஸாரைக் கொண்டு அந்த இடத்தை சோதனையிட்டபோது, இந்தியாவின் பெங்களூருவிலிருந்து வந்த தமிழினி என்ற பெண், ஒரு ஈரடுக்கு மாடி வீட்டின் மேல் தளத்தில் வாடகைக்கு தங்கியிருப்பது தெரியவந்தது.

இதற்காக அவர் மாதந்தோறும் 6,000 நேபாள ரூபாய் செலுத்தியதும் கண்டறியப்பட்டது.

மேலதிக விசாரணையில், தமிழினி என்ற பெயரில் தங்கியிருந்தது இஷாரா என்பது உறுதி செய்யப்பட்டது.

அனைத்து தகவல்களையும் உறுதிப்படுத்திய பின்னர், நேபாள பொலிஸாருடன் அந்த இடத்திற்குச் சென்ற ஒலுகல மற்றும் மற்றுமொரு அதிகாரி, கீழ் தளத்தில் தங்கியிருந்து, அவர்களை மேல் தளத்திற்கு அனுப்பி இஷாராவை கைது செய்யுமாறு அறிவுறுத்தியுள்ளனர்.

அதன்படி, நேபாள பொலிஸார் அவரைக் கைது செய்தபோது அவர் எந்த எதிர்ப்பையும் காட்டவில்லை.

பின்னர், ஒலுகல அவர் இருந்த இடத்திற்குச் சென்று, ’எப்படி இருக்கிறீர்கள் செவ்வந்தி?’ என்று வினவியுள்ளார். அதற்கு பதிலளித்த அவர், ’நன்றாக இருக்கிறேன் சேர்’ என்று கூறியுள்ளார்.

’தேவையான பொருட்களை எடுத்துக்கொள்ளுங்கள்’ என்று ஒலுகல கூறியபோது, ’சேர், எனக்கு இந்த நாடே வெறுத்துப்போயிருந்தது’ என்று அவர் குறிப்பிட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

அவரிடம் நடத்தப்பட்ட விசாரணைகளின் போது, கணேமுல்ல சஞ்சீவவின் கொலைக்குப் பிறகு சுமார் ஒரு மாதம் மத்துகமவில் உள்ள ஒரு வீட்டில் தலைமறைவாக இருந்ததாக இஷாரா கூறியுள்ளார்.

பின்னர், பத்மேயின் அறிவுறுத்தலின் பேரில் மித்தெனிய பகுதிக்குச் சென்று அங்கும் சுமார் ஒரு மாதம் தங்கியிருந்துள்ளார்.

அப்போது ‘பெக்கோ சமன்‘ என்பவர் அவருக்குத் தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் செய்து கொடுத்துள்ளார்.

பின்னர், யாழ்ப்பாணம் சென்று மூன்று நாட்கள் தங்கியிருந்து, ஜே.கே. பாயுடன் படகு மூலம் இந்தியாவுக்கு தப்பிச் சென்றுள்ளார்.

இதற்கு சுமார் ஐந்து மணி நேரம் ஆனது என்றும், ஒரு பெரிய படகில் சிறிது தூரம் சென்று, பின்னர் ஒரு சிறிய படகு மூலம் இந்தியாவிற்குள் நுழைந்ததாகவும் இஷாரா குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவில் சுமார் இரண்டு வாரங்கள் தங்கியிருந்தபோது, ஜே.கே. பாய் அவருக்கு ‘தமிழினி‘ என்ற பெயரில் ஒரு இந்திய அடையாள அட்டையை தயாரித்துக் கொடுத்துள்ளார். அதன் பின்னரே நேபாளம் சென்றதாக அவர் கூறியுள்ளார்.

மேலும் அவரிடம் நடத்தப்பட்ட விசாரணைகளில், தன்னுடன் ஜே.கே. பாய் தவிர மேலும் நான்கு பேர் இருந்ததாக இஷாரா தெரிவித்துள்ளார்.

அதன்படி, கம்பஹா பபா, நுகேகொடை பபி, ஜப்னா சுரேஷ் மற்றும் இஷாராவின் தோற்றத்தில் இருந்த தக்ஷி ஆகியோரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கெஹெல்பத்தர பத்மே கைது செய்யப்படுவதற்கு சுமார் இரண்டு வாரங்களுக்கு முன்பு, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சுரேஷும் தக்ஷியும் விமானம் மூலம் நேபாளம் வந்துள்ளனர்.

அவர்கள் ஆறு பேரும் ஒரே வீட்டில் தங்கியிருந்த நிலையில், பத்மே கைது செய்யப்பட்ட பின்னர், ஆறு பேரும் ஆறு வெவ்வேறு இடங்களுக்குப் பிரிந்து சென்றதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

மேலும், தக்ஷியின் விபரங்களைப் பயன்படுத்தி செவ்வந்தியை ஒரு ஐரோப்பிய நாட்டிற்கு அனுப்ப பத்மே ஏற்பாடு செய்திருந்ததும் வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

எனினும், பத்மேயின் கைதைத் தொடர்ந்து, இந்தக் குழுவினர் கடுமையான நிதி நெருக்கடிகளை எதிர்கொண்டதாக பொலிஸார் கண்டறிந்துள்ளனர்.

இதேவேளை, நுகேகொடை பபியிடம் மேல் மாகாண தெற்கு குற்றத் தடுப்புப் பிரிவு நடத்திய விசாரணையில், சில மாதங்களுக்கு முன்பு கெஹெல்பத்தர பத்மே தன்னையும், கம்பஹா பபாவையும் இந்தியாவிற்கு வரவழைத்ததாக தெரியவந்துள்ளது.

மன்னார், பேசாலை பகுதியிலிருந்து படகு மூலம் இந்தியாவுக்கு புறப்பட்டதாகவும், அதற்கான ஏற்பாடுகளை ‘பெக்கோ சமன்‘ என்பவர் மூலம் பத்மே செய்ததாகவும் சந்தேகநபர் கூறியுள்ளார்.

பத்மே 2019ஆம் ஆண்டு கொஹூவல, ஜம்புகஸ்முல்ல பிரதேசத்தில் ஒருவரைக் கொலை செய்துவிட்டு, அன்றே டுபாய்க்கு தப்பிச் சென்றவர். பின்னர், கடந்த ஆண்டு ஜூலை 12 அன்று அந்நாட்டிலிருந்து நாடு கடத்தப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரை 72 மணி நேரம் தடுத்து வைத்து விசாரணை நடத்தி வருவதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# ஒரு கண்ணில் வெண்ணெய்

**என்.சத்திய மூர்த்தி**

அண்மையில் அரசு அதிபர் அநுரகுமார, மூத்த அமைச்சர் பிமல் ரத்னாயகவின் மேற்பார்வையில் இருந்து, அவர் தலைமைத்துவம் நல்கிய துறைமுகம் மற்றும் விமான சேவை துறைகளை மற்றொரு அமைச்சருக்கு மாற்றி உள்ளார். கொழும்பு துறைமுகத்தில் இருந்து சுங்கதுறையினரின் அனுமதி இல்லாமல், வெளியே எடுத்துச்செல்லப்பட்ட முன்னூறுக்கும் மேலான கொள்கலன்கள் குறித்த விடயமே இதற்கான காரணம் என்று தென்னிலங்கை பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன.

வடமாகாண தமிழர்கள் மற்றும் கிழக்கில் முஸ்லிம் வியாபாரிகளின் கோணத்திலிருந்து பார்த்தால், இடைகாலம் மற்றும் எதிர்காலத்தில் பிமல் ரத்னாயகாவிடமிருந்து இந்த இரண்டு துறைகளை பறித்து பிறிதொருவரின் பொறுப்பில் கொடுத்தது, வரவேற்கப்பட வேண்டிய விடயம். காரணம், வட மாகாணத்தில், பலாலி விமான நிலையம் மற்றும் காங்கேசன் துறைமுகம் ஆகியவற்றின் விரிவாக்கம் நடைபெறாமல் தடுப்பதற்கான முயற்சிகளை அவர் மேற்கொண்டார் என்பதை யாழ்பாணப் பத்திரிகை செய்திகளில் இருந்து அவதானிக்க முடிந்தது.

இந்த இரு திட்டங்களும் செயல்படுத்தப்படுமேயானால், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பொருளாதாரம் விரிவடையும். வேலை வாய்ப்புகள் பெருகும். அதன் காரணமாக தனிநபர் வருமானம் அதிகரிக்கும். அரசிற்கும் பல்வேறு வழிகளில் சுங்க தீர்வை மற்றும் உள்நாட்டில் வியாபாரமாகும் இறக்குமதி செய்யப்பட்ட பொருள்களினால் வருமானம் சிறக்கும். இதுவே, இங்கிருந்து இந்தியா மற்றும் மற்ற வெளிநாடுகளுக்கு நேரடியாக ஏற்றுமதி செய்யப்படும் பொருள்களின் மூலம் இரு வழிகளில் பயன் தரும்

வெளிநாடுகளில், பலாலி விமானநிலையத்தில் இருந்து தற்போது இந்தியாவிற்கு,

அதிலும் குறிப்பாக தமிழ் நாட்டிற்கு மட்டுமே நேரடி விமான தொடர்பு இருக்கிறது. இதுவே பல்வேறு உலக நாடுகளுக்கு நேரடி விமான தொடர்பு இருந்தால்... சற்று யோசித்து பாருங்கள். புலம்பெயர்ந்தோர் அனைவருமே, தலைநகர் கொழும்புவின் காட்டுநாயக்கா விமான நிலையத்தில் இறங்கி, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள தங்களது சொந்த ஊர்களுக்கு பயணம் செய்ய வேண்டியிராது. பலாலியில் இருந்து உடனடியாகவே தங்களது குடும்பத்தவர்களை சென்று சந்திக்க முடியும்.

இது உணர்வுபூர்வமான விடயம் என்றால், அதனோடு ஒட்டியுள்ள பணபலன்கள் எத்தனை, எத்தனை? பலாலி விமான நிலையத்தோடு ஒட்டிய வாடகை கார் தொழில், தற்போது உள்ளதைவிட அதிகமான தனியார் விடுதிகள், அவற்றை ஒட்டிய வியாபாரம் மற்றும் இவை அனைத்தையும் சார்ந்த வேலை வாய்ப்புகள் உடனடியாக அதிகரிக்கும். இதுவே, புலம்பெயர்ந்தோர் அல்லாத மத்திய மாகாணங்களை சேர்ந்த புலம்பெயர்ந்த சிங்களர்கள், அல்லது, மேற்காசிய நாடுகளில் பணியாற்றும் சிங்கள மற்றும் முஸ்லிம் தொழிலாளர்கள் மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் என்றெல்லாம் எண்ணிக்கை அதிகரித்தால், அதன் பண பயன்களும் சொல்லி மாளாது.









## இட நெருக்கடி

நாட்டின் சுற்றுலாத் துறை சார்ந்தோர் கூற்றின்படி, தற்போது காட்டுநாயக்கா விமானநிலையம் எதிர்நோக்கும் இட நெருக்கடியால், நாடு கணிசமான வெளிநாட்டுப் பயணிகளை இழந்து வருகிறது. இதுவே, பலாலி விமான நிலையம் விரிவாக்கப்பட்டால், இலங்கைக்கு வராமல் அண்டை நாடுகளுக்குப் பயணம் செய்யும் மேல்நாட்டு பயணிகள், இங்கேயே வருதற்கு வழி பிறக்கும்

பொதுவாகவே இது போன்ற பயணிகள், குழுக்களாக தங்கள் நாடுகளில் இருந்து தனி விமாங்களில் இங்கு வருகை தருவார்கள். அவர்கள்தான் அதிகப்படியாக இங்கு செலவு செய்பவர்கள். ஆனால், அவர்கள் சுற்றுலா நிறுவனங்களின் மூலமே பயணிப்பவர்கள். இதில், சுற்றுலா பயணிகள், விமான நிலைய நெருக்கடிகளால் தொல்லைபடுவதை அந்த நிறுவனங்கள் விரும்பாது.

எனவே, அவர்கள், இலங்கை இல்லையென்றால், மாலதீவு அல்லது மொரிஷியஸ் அல்லது சீஷல்ஸ் போன்ற, தங்கள் நாடுகளில் கிடைக்காத சூரிய வெளிச்சம் மற்றும் சூரிய குளியலுக்கு உகந்த நாடுகளுக்குச் செல்வார்கள். அவ்வளவுதான். ஆனால் அதனால் நஷ்டம் இலங்கைக்குதான். அதிலும் குறிப்பாக, வேலைவாய்ப்பு மற்றும் அன்னிய செலவாணி ஆகியவற்றை பெருக்குவதற்கு பொருளாதார நிர்பந்தங்கள் உள்ள இந்த நாட்டில், அரசு அவற்றிகான வசதிகளையும் வழிமுறைகளையும் நடைமுறைகளையும் மட்டுமே ஆலோசித்து செயல்படுத்தவேண்டும்.

பலாலியில் அதிக அளவில் சர்வதேச விமானங்கள் வந்து செல்லுமானால், அவற்றிற்கு தேவையான எரிபொருளை இங்கேயே நிரப்பி செல்ல வேண்டும். அதன் இலாப கணக்கு அரசிற்கு என்றால், அதனால் கிடைக்கும் வேலைவாய்ப்புகளில் ஒரு பகுதியாவது இங்கே உள்ள தமிழர்களுக்கு உரித்தானது. அதனை எல்லாம் கேட்டுப்பெற்றுத்தருவதே இங்குள்ள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசியல்வாதிகளின் தலையாய கடமையாக இருத்தல்வேண்டும்.



## வரவேற்கும் விடயம்

இது போன்றே காங்கேசன்துறை விரிவாக்கம் மேற்கொள்ளப்பட்டால், அதனால் இந்த நாட்டிற்கும் இங்கு, வடக்கு வாழ் மக்களுக்கும் கிடைக்கும் பயன்கள் அதிக அளவில் இருக்கலாம். குறிப்பாக, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்திற்கும் இந்தியாவில் தமிழ் நாட்டிற்கும் இடையேயான ஏற்றுமதி-இறக்குமதி வியாபாரம் சூடு பிடிக்கலாம். அதிலும் குறிப்பாக விவசாய விளைபொருள்களை அங்கிருந்து இறக்குமதி செய்யும் அதே நேரத்தில், அங்கு தேவையான விளைபொருள்களை இங்கு பயிர் செய்தால், இங்குள்ள விவசாயம் சார்ந்த பொருளாதாரம், வேலை வாய்ப்பு மற்றும் தனி நபர் வருமானமும் உயரும்.

அடுத்தடுத்த கட்டங்களில், காங்கேசன்துறை துறைமுகத்தை பயன்படுத்தி, இந்தியாவிற்கும் அப்பாலான நாடுகளுடனான வர்த்தகத்தை பெருக்கிக் கொள்ளலாம். காட்டுநாயக்கா விமானநிலையத்தைப் போலவே, கொழும்பு துறைமுகத்தில் இட நெருக்கடியால், சர்வதேச கப்பல் நிறுவனங்கள், முகம் சுளிக்கத் தொடங்கி உள்ளன. அவர்களைப் பொறுத்த வரையில் ஒவ்வொரு மணிதியால தாமதமும் இலட்ச கணக்கான டொலர் நஷ;டம் என்று கணக்குக் காட்டுவார்கள். இதுவே, விரிவாக்கத்தின் பின், வடக்கே காங்கேசன்துறையில் பிற நாடுகளின் சிறிய மற்றும் நடுத்தர கப்பல்களாவது வந்து செல்ல முடியுமென்றால், அது வரவேற்கப்பட வேண்டிய விடயமாகவே பார்க்கப்படும்.

இல்லையென்று சொல்லாமல், தெற்கே அம்மாந்தோட்டையில், சீனா ஒரு பெரிய துறைமுகத்தை அமைத்து அதன் பயன்பாட்டை கூவிகூவி விற்றுவருகிறது. அல்லது அத்தகைய முயற்சிகளைத் தொடருகிறது. என்றாலும், கொழும்புத் துறைமுகத்தை நாடும் அளவிற்கு சர்வதேச கப்பல் நிறுவனங்கள் அம்மாந்தோட்டையை விரும்புவதில்லை. அவர்களும் சரி, அவர்கள் சார்ந்த நாடுகளின் அரசுகளும் சரி, சீனா சம்மந்தப்பட்ட எந்த நிறுவனத்துடனும் பயணிப்பதை விரும்புவதில்லை. காரணம், சீன அரசு மற்றும் அதன் உளவுதுறைமீதுதொடரும்அவர்களது நம்பிக்கையின்மையே.

இதுஇப்படிஇருக்க,இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையேயான தரைப்பாலம் எதிர்பார்ப்பது போல் உருவெடுக்குமேயானால், அதன் மூலம், இந்த நாடு, அதிலும் குறிப்பாக தமிழர் பகுதிகளுக்கு கிடைக்கும் பயன்களை சிந்தித்து பார்க்ககூடமுடியாது. அந்த ஒரு பாலத்தின்மூலம்இலங்கைஎன்றதீவு, இந்தியா முழுமைக்கும் மட்டுமல்ல, ஆசிய-ஐரோப்பிய நாடுகளுடனான தரைவழிபாதையைப்பெற்றுவிடும்.

அப்போதும்ஏற்றுமதி-இறக்குமதி அதிக அளவில் கடல்வழியாகவே நடைபெறும். என்றாலும், அத்தனை பரந்து விரிந்த நிலப்பரப்போடு இணைத்துச் செயல்படுவதே, இங்குள்ள சிங்கள-தமிழ் மக்கள் மற்றும் அவர்களின் அரசியல்-சமூக தலைமைகளின் எண்ணவோட்டத்தையே விரிவடையச் செய்யும். இது தவிர பொருளாதார வளர்ச்சி...

## திட்டமிட்டுத் தடுக்க...

இந்த பின்னணியில், வட மாகாணத்திற்கு கிடைக்க வேண்டிய வளங்களை அமைச்சர் பிமல் திட்டமிட்டு தடுக்க முயற்சிக்கிறார்என்றசெய்திபரவியது. அதாவது, பலாலிமற்றும் காங்கேசன்துறை விரிவாக்க திட்டத்திற்கு போதிய நிதிவசதி இல்லை என்று காரணம்காட்டி அவற்றை அமைச்சர் பிமல் பின்தள்ளி போட பார்க்கிறார் என்ற எண்ணம் தோன்றியது. அதுவும் குறிப்பாக, அவர். எட்டு-பத்து நாட்களுக்கு ஒரு முறை வட மாகாணம் செல்லத் தொடங்கியபோது, அந்த எண்ணம் உறுதியானது.

முதலில், எப்போதாவது நடைபெற இருக்கும் மாகாண சபை தேர்தலை மனதில் வைத்து, ஆளும் ஜே.வி.பி.-என்.பி.பி கூட்டணியின் தேர்தல் வாய்ப்புகளை அதிகரிக்கும் விதத்தில், கட்சியின் மூத்த தலைவர் என்ற முறையில் பிமல் ரத்னாயக்கே வட மாகாணம் செல்ல பணிக்கப்பட்டுள்ளார் என்றே செய்திகள் பரவியது. ஆனால், அவரது அரசு மற்றும் அரசியல் பணிகள் அத்துடன் நின்றுவிடவில்லை.

மாறாக, வட மாகாண பயணங்களின்போது, பிமல், தான் சார்ந்த அமைச்சுகளின் அரச விழாக்களில் கொள்கைப் பிரகடனங்களை விடுத்துச் சென்றார். அவை குறித்து அவருக்கு அரசு அதிபரின் அனுமதி இருந்ததா, அல்லது அமைச்சரவை அந்த கொள்கை முடிவுகளை விவாதித்து முடிவு செய்திருந்ததா? இது போன்ற கேள்விகளுக்கு பதில் கிடைத்திருக்வில்லை.

பலாலி வளர்ச்சித் திட்டம் ஆகட்டும், காங்கேசன்துறை விரிவாக்கம் ஆகட்டும், இரண்டு திட்டங்களுக்குமான செலவுகளை அண்டை நாடான இந்தியா மானியமாக வழங்கி உள்ளது. இந்த வருடம் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கைப் பயணத்தின்போது, இவை குறித்து இரண்டு நாடுகளும் ஒப்பந்தம் கைசாத்திட்டன. அதன் அடிப்படையில், உதாரணத்திற்கு, காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்திக்கு இந்திய அரசு 65 மில்லியன் டொலர் பண உதவி செய்வதாக உத்திரவாதம் கொடுத்தது.

இந்த இரு திட்டங்களுக்கும் சரி, இந்தியா அல்லது வேறு எந்த நாடு உதவும் திட்டங்களுக்கும் சரி, அந்த அரசு பணியாளர்கள், இலங்கை அரசு பொறியாளர்களுடன் ஆராய்ந்து அறிந்தே அவற்றிற்கான செலவு மற்றும் செயல் திட்டங்களை முடிவு செய்வார்கள். கால ஓட்டத்தில், அந்த பட்ஜெட் எகிறிவிடும் வாய்ப்பு உண்டு. அதனை அனைத்துத் தரப்பினரும் அறிந்தே உள்ளனர். அவ்வாறான நிலையில், திட்டத்தை மறுபரிசீலனை செய்து, அதிக பண உதவிகளை செய்வது வழமையான விடயமே.

## இந்தியாவுடன் விவாதம்

ஆனால், அவ்வப்போது வட மாகாணத்தில் பிரசன்னமாகி வந்த அமைச்சர் பிமல், பலாலி மற்றும் காங்கேசன் துறை வளர்ச்சி பணிகளுக்கு திட்டமிட்டதைவிட அதிக பணம் தேவைபடுவதால் அந்த வளர்ச்சி பணிகளே முழுவதுமாக பின்போடப்படுகின்றன என்ற வகையில் செய்தி வெளியிட்டுச் சென்றார். பின் நிகழ்வுகளை வைத்து நோக்கும்போது அதிபர் அநுரவும் பத்திரிகை செய்திகள் மூலமே தனது அரசு இவ்வாறெல்லாம் தனது முந்தைய திட்டத்தை கைவிட்டுள்ளது என்று அறிந்து கொண்டார் என்றே எண்ண தோன்றகிறது. அதிபரின் நிலையே இதுவென்றால், இந்திய அரசு மற்றும் இலங்கையில் செயலாற்றும் அதன் பிரதிநிதிகளின் நிலை தான் என்ன?

உண்மைஎன்னவோ, அந்ததிட்டங்களின்செலவினங்கள் அதிகரித்து இருந்தால், இலங்கை அரசு அது குறித்து இந்தியாவுடன் விவாதித்து இருக்கவேண்டும். இந்திய அரசும் தேவையான அதிக மானியங்களை வழங்கி இருக்கும். இல்லை, இந்தியா இந்த இரு திட்டங்களின் மீதும் செலவினங்களைஅதிகரிக்கவிரும்பவில்லைஎன்றால், பிமல் கூறிய முடிவுகளை அப்போது மட்டுமே எடுத்திருக்க முடியும். எடுத்திருக்க வேண்டும். அதேவேளையில், இந்தியா அதிக பணம்கொடுக்கவில்லைஎன்றநிலைதோன்றினால், தற்போது அளித்துள்ள அல்லது அளிக்கவிருக்கும் மானியங்களுக்கான வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்தலாம் அல்லவா?

இதில் மேலதிக பிரச்சினையே, வட மாகாணத்திற்கான, குறிப்பாக தமிழர்களுக்கான வளர்ச்சித் திட்டங்களை அமைச்சர் பிமல் தடுத்து நிறுத்த முயற்சித்தார் என்பது மட்டுமல்ல. அதேசமயம், தென்னிலங்கையில், பௌத்த மதத்தினரின் புண்ணிய தலமான கண்டி பகுதியில், 500 மில்லியன் டொலர் செலவில் புதியதொரு அதிவேக நெடுஞ்சாலைத் திட்டத்தை போக்குவரத்து துறைக்கு அமைச்சராக தொடரும் பிமல் ரத்னாயகே முன்னெடுத்து செல்கிறார் என்ற செய்தி வியப்பளிக்கிறது. அதிலும் குறிப்பாக, அந்த 500 மில்லியன் டொலர் பணத்தை சீனா கடனாக அளிக்கிறது. வடக்கிலோ இந்தியா, தான் உதவி செய்யும் திட்டங்களுக்கு முழு மானியம் அளிக்கிறது.

அந்த விதத்தில், பிமல் ரத்னாயகேவின் 'ஒரு கண்ணில் வெண்ணை, மறு கண்ணில் சுண்ணாம்பு' என்ற பேரினவாத அரசியலுக்கும் அதிபர் அநுர முற்றுப்புள்ளி வைத்துள்ளார் என்றே எண்ணத் தோன்றுகிறது. அதாவது, இந்த அரசிற்கு முன்பு பதவியில் இருந்த அனைத்து தலைமைகளின் பேரினவாதப் போக்கையே அரசியல் தீர்வு என்ற விடயத்தில் மட்டுமல்ல, பொருளாதார வளச்சித் திட்டங்கள் என்ற வகையிலும், அமைச்சர் பிமல் மட்டுமாவது முன்னெடுத்திருந்தார் என்றே கருத தோன்றுகிறது.

உ
முருகன் துணை

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

# செவ்வழி நயனம்

## சைவ வாழ்வு

நாம் விரும்பியபடி ஒன்றைப்பெறும் போது மனதிலே இன்பம் உண்டாகிறது. நாம் மாம்பழம் உண்ண விரும்பும்போது அது கிடைக்குமாயின் இன்புறுகிறோம். அன்றியும் நாம் விரும்பமாட்டாத ஒன்று நம்மை சேராவிட்டாலும் நாம் இன்புறுகின்றோம். களவு செய்தவன் அகப்பட்டாமல் தப்பிவிடுவானாயின் மிகவும் சந்தோசப்படுகிறான்.

இப்படியின்றி நாம் விரும்மிய ஒன்று கிடையாவிட்டாலும் ,விரும்பாது வந்து சேர்ந்தாலும் துன்பம் உண்டாகிறது. எனக்காயினும் என்னை சேர்ந்தவருக்காயினும் என்னுடைய பொருளுக்காயினும் இடர் நேர்ந்தால் துக்கம் உண்டாகிறது. யாராயினும் இடர் செய்தால் அவரிடத்தில் கோபம் உண்டாகிறது. எதாயினும் இடர் வரப்போகிறது கண்டால் அச்சம் உண்டாகிறது.

சைவவாழ்க்கையிலேதுன்பத்துக்காயினும்துக்கத்துக்காயினும் கோபத்துக்காயினும் அச்சத்துக்காயினும் இடம் வராது .பச்சைக் கண்ணாடியை அணிந்து கொண்டு எதைப் பார்த்தாலும் அது பச்சையாகவே தோன்றும். வெண்மையான பாலும் செம்மையான இரத்தமும் நீலமான ஆகாயமும் கரிதாகிய காகமும் பச்சையாகவே தோன்றும். அது போல சைவமாகிய கண்ணாடியாற் பார்த்தாலும் யாவும் உவப்பானவைகளாகவே தோன்றும். நான் விரும்பிய பொருள் கிடையாதுவிட்டால் துன்பமில்லை. எனது கப்பல் ஆழ்ந்து போனால் துக்கமில்லை. என் குழந்தை இறந்து போகும் என்று அஞ்சுவதில்லை. என் பயிரை அழிப்பவனைத் தடுத்தலும் கண்டித்தலும் கண்டித்தலுமின்றி கோபித்தலில்லை.

சைவ சமயத்தின்படி ஆவணம் என்னும் வியாதியினாலே பீடிக்கப்பட்டிருக்கின்றோம். இந்தவியாதியைத்தீர்க்கும்வைத்தியர் சிவபெருமான். ஆதலால் அவருக்கு 'வைத்தியநாதன்' என்று பெயர். நோயாளிக்கு பொருந்தாத உணவுகளை விரும்புதல் உண்டு. ஆயினும் வைத்தியன் அந்த உணவுகளைக் கொடுக்க மாட்டான். அதுபோல நமக்கு ஆகாத பொருள்களை நாம் விரும்புதல் உண்டு. ஆதலால் நாம் விரும்பிய பொருள் நமக்கு கிடைக்காவிடின், அது நமக்கு ஆகாது என்று உணர்ந்து அது நோயாளிக்கு கிடையாது என்று சந்தோசப்படல் வேண்டும். நாம் வேதனையில் அகப்பட்டாலும் அவைகள் நமது நன்மைக்காக கடவுளால் அருளப்பட்டவை என்று இன்புறுதலே நன்மையாகும்.

எமது இன்பங்கள் யாவும் அவருடைய செயலே. அவர் செய்வதெல்லாம் நன்மையே என்ற நம்பிக்கை உறுதியாக இருந்தால் அப்பர் சுவாமிகள் பாடி அருளியபடி

'நாமார்க்குங் குடியெல்லாம் நமனை அஞ்சோம்
நரகத்திலிடர்ப்படோம் நடலை யில்லோம்'
'.........அஞ்சுவதியாதென்று மில்லை
அஞ்சவருவதுமில்லை'



என்றும் எப்போதும் ஆனந்தமாய் வாழலாம். துக்கம் கோபம் அச்சம் மூன்றும் உடலுக்கு தீமையானவை. என்னுடைய கப்பல் ஆழ்ந்து போனால் பெருமுயற்சி செய்து பொருளைத் தேடிநட்டத்தை தீர்த்தல். 'பிறந்தவர் இறப்பது திண்ணம்' என்பதைக்கண்டு மனமகிழலாம். சைவர்களல்லாதாரும் செய்யத்தக்கவைகளாம்;.

**நிலக்ஷனா**

உங்கள் கனவை நனவாக்க ...!
NVQ Level 3 & 4 Courses
புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025
கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு



●CARE GIVER COURSE
(பராமரிப்பாளர் பயிற்சி)
●NURSE ASSISTANT COURSE
(தாதிய உதவியாளர் பயிற்சி)
கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன்
3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்
தகுதி:
●வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
●ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
●GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி
JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY
46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722




Mon-Sat Hp World - 077 359 4363 | Jaffna - 077 766 7975 | Exclusive - 076 359 4359
Mannar - 076 359 4368 | Kilinochchi - 076 359 7610















இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயா'ரகி 17.10.2025இல் வெளியிடப்பெற்றது